1995 மார்ச் 31] [பேரவைத் தலைவர்]

நடைமுறையின்படி, அந்தப் புகாரைத் தொலைக்காட்சியினருக்குத் தெரிவித்து, அவர்களுடைய பதிலைப் பெற்று, அதன் பின்னர் அது குறித்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பதைப் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

4. 29-3-1995 ஆம் நாளன்று உறுப்பினர் திரு. ச. அழகிரி அவையில் தெரிவித்த ஒரு கருத்து குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் இந்த நாட்டிற்காக சுதந்திரம் பெற்று கொடுத்த மகாத்மா காந்தி அவர்களைப் பற்றியும், நேரு அவர்களுடைய பரம்பரை பற்றியும் மிகவும் தாழ்ந்த நிலையில் பேசியதற்காக திரு. சஞ்சய் ராமசாமி உட்பட எங்களுடைய உண்மையான காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் கண்டனம் தெரிவித்தோம். அதனுடைய அடிப்படையில் இந்தப் பிரச்சினை எழுந்தது. தொடர்ந்து நாங்கள் அந்த உறுப்பினர் மன்னிப்பு கோருகிற வரை நாங்கள் அமர மாட்டோம், விடமாட்டோம், என்று சொல்லிக் கொண்டு, வலியுறுத்திக் கொண்டு இருக்கிறோம். இந்த நிலையில் அவர்கள் இதை திசை திருப்புவதற்காக, நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அரிசி விலையை ஒரு ரூபாய் குறைத்திருப்பதை மறைப்பதற்கு, திசை திருப்புவதற்கான முயற்சியில்தான், காவலர்களை இவர்கள் தாக்கி விட்டு, காவலர்கள் இவர்களைத் தாக்கியதாக புகார் கொடுத்து திசை திருப்புகிறார்கள். எப்படி அவர்கள் திசை திருப்பினாலும், எங்களைப் பொறுத்தவரையில், தலைவர் நரசிம்மராவ் தலைமையில் இயங்குகின்ற காங்கிரஸ் உறுப்பினர்களாகிய எங்களைப் பொறுத்தவரையில், இங்கே பேசிய அழகிரி அவர்கள் எங்கே வந்தாலும் அவர்கள் பேசிய பேச்சை வாபஸ் பெறவேண்டும், அல்லது மன்னிப்புக் கோரவேண்டும் என்கிற கோரிக்கையை வலியுறுத்துவோம், அதுவரையில் ஓயமாட்டோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வலியுறுத்திக் கொண்டே இருக்கலாம். நீங்கள் வலியுறுத்துவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. அதிலே ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) போதும் உட்காருங்கள்.

திரு. ஆர். சிங்காரம்: வலியுறுத்துவோம் என்பதை மட்டும் தெரிவித்து அமர்கிறேன்.